# மெட்ரோ பயணம் இன்றும் இலவசம்

சென்னை, பிப்.12: சென்னை மெட்ரோ ரயிலில் திங்கட்கிழமை இலவச பயணம் செல்லலாம் என பயணிகளுக்கு மெட்ரோ நிர்வாகம் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. அதையடுத்து, மெட்ரோ ஸ்டேஷன்களில் நேற்று காலை தொடங்கி மக்கள் வெள்ளம் அலைமோதியது. நவீன வடிவமைப்பு பெட்டிகளில் சொகுசு பயணத்தை பயணிகள் அனுபவித்தனர். ஆனால், டி.எம்.எஸ் மற்றும் விமானநிலையம் இடையே ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக மெட்ரோ சேவை நேற்று மதியம் திடீரென 6 மணி நேரத்துக்கு பாதிப்பானது. கோளாறு சரி செய்யப்பட்டது என்றும், வழக்கப்படியான சேவை இன்று தொடரும் என அறிவித்துள்ள மெட்ரோ நிர்வாகம், இன்று (செவ்வாய்க்கிழமை) ஒரு நாள் கூடுதலாக இலவச சேவை நீட்டிப்பு செய்யப்பட்டு இருப்பதாகவும், இன்று இரவு 10.00 மணி வரை பயணிகள் இலவச பயணம் அனுபவிக்கலாம் எனவும் கூறியுள்ளது.